2013 மார்ச் 28]

இருந்தாலும், மேற்கண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு கருணையுள்ளத்தோடு பரிசீலித்து, அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் மருத்துவர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தமிழ்நாட்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் மொத்தமுள்ள 691 பணியிடங்களில், 557 பணியிடங்கள் நிரப்பப்பட்டுவிட்டன. மீதமுள்ள 134 காலிப் பணியிடங்களை நிரப்ப (மேசையைத் தட்டும் ஒலி) நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலிப் பணியிடங்களை நிரப்பித் தருகிறேன் என்று சொல்லிய, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

மாணவர் விடுதி

***18384—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இனுங்கூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2013 மார்ச் 28

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மூன்றாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று பொற்கால ஆட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு இரண்டு ஆண்டுகளில் 56 விடுதிகளை அளித்து சாதனை படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இனுங்கூர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் மாணவர் விடுதி அமைப்பது குறித்த கருத்துரு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் குல தெய்வமாக விளங்குகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். குளித்தலை வட்டம், இனுங்கூர் கிராமம், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் சுமார் 700 மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். சுற்றுப்புறத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து இங்கே வந்து படிக்கிறார்கள். அங்கே 17 கிலோ மீட்டர் தூர சுற்றளவில் எந்தவொரு பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியும் இல்லாத காரணத்தால், அந்த ஊரிலே பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி அமைத்துத் தந்தால், மாணவ, மாணவிகள் சுற்றுப்புறத்திலிருக்கின்ற பள்ளிகளிலிருந்து வருகை தந்து, தங்கிப் படிப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசிபெற்று, அங்கே ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.*

2013 மார்ச் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்பாரற்றுக் கிடந்த இந்தத் துறைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் புத்துயிர் அளித்து, மிக அதிகமான முக்கியத்துவம் அளித்து வருகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப் போன்று, அந்தப் பகுதியில் விடுதிகள் அமைக்கத் தேவை ஏற்படுமானால், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலுடன் ஆய்வு செய்து, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று, கரூர் மாவட்டம், குளித்தலை வட்டம், இனுங்கூர் கிராமத்தில் விடுதி ஒன்றை ஏற்படுத்துவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாப்பா சுந்தரம் அவர்கள்.*

திரு. அ. பாப்பா சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியிலே இடவசதி இருப்பதால் மாண்புமிகு அம்மா அவர்களின் கருணையோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பரிசீலித்து அதை செய்து கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

104—

திருப்பணி

***20361—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—